IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
MCOP 3/2022

Deposition of RW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 24.07.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கோகுல் | **Caste** | : | |
| **S/o.** | : | சுப்ரமணி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை :–**

நான் கொளத்தூர் சின்னமேட்டுரில் குடியிருக்கிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்தில்இருந்து அழைப்பாணை வந்து அதன் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். 11.2.2021 ந்தேதியில் தோஸ்த் என்ற வாகனத்தை நான்தான் ஓட்டிவந்தேன். தானமூர்த்திக்காட்டில் இருந்து கொளத்தூர் நோக்கி வந்தேன். எனக்கு எதிராக வாகனத்தை ஓட்டிவந்தவர் எனது வாகனத்தை கடக்கும்போது என் வாகனத்தின் வலதுபுற பக்கவாட்டில் உள்ள ஏங்கில் கம்பியில் மோதிவிட்டார். அதனால் விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்திற்கு எனக்கு எதிராக வந்தவர்தான் காரணம். எனக்கு வாகனம் ஓட்டுவதற்கு எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஓட்டுநர் உரிமம் அசலுடன் ஒப்பு நோக்கப்பட்டது. ஓட்டுநர் உரிமத்தின் நகல் **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் மீது போலிசார் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார் கள் என்றால் சரிதான். நான் மேற்படி குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் வாகனத்திற்கு காப்பீடும் எனக்கு ஓட்டுநர் உரிமமும் இருந்தது என்றால் சரிதான். நான் குற்றம் செய்ததற்கு முதல்

நோக்கு காரணம் இருந்ததால்தான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றாலும் என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு உண்மை என்பதால்தான் போலிசார் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்றாலும் மேற்படி இறுதி அறிக்கையை ஏற்றுக்கொண்டு நான் அபராதம் செலுத்தியுள்ளேன் என்றாலும் சரிதான். விபத்துசமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததாலும், நான் ஓட்டிச்சென்ற வாகனத்திற்கு காப்பீடு இருந்ததாலும் மனுதாரருக்கு நஷ்டஈடு செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

ஒம்/—கோகுல்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.